இந்தியைக் கட்டாயமாக்கும் மமதை ஏன்?

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1]   சென்னை (30—5—50)   வெளியீடு (31—5—50)   [இதழ் 265

தமிழ்விரோதிகள் அதிகாரம் வகிப்பதால்தான் இந்நிலை உள்ளது

—(o)—

மாலைபோட்டு மந்திரிகளை வரவேற்பதை உடனே நிறுத்துங்கள்

—(o)—

"சிறைக்கூடம் புகவும் தயாராக இருக்கிறேன்"

முத்தமிழ் மாநாட்டில் மூதறிஞர் பாரதியார் முழக்கம்

"தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குத்தான் ஆக்கம் தரப்படவேண்டும்; ஆளவந்தவர்கள் அதைச் செய்யாததோடு தாய்மொழித் தமிழை நசுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தும் மந்திரிகள் நாட்டிலே பவனி வந்தால் அவர்களை மாலை போட்டுவரவேற்பதை விட்டுப் பகிஷ்காரம் செய்யவேண்டும்" என்று சென்ற சனியன்று கோவையில் ஆரம்பமான முத்தமிழ் மாநாட்டைத் திறந்துவைக்கையில் மூதறிஞர் நாவலர் சோமசுந்தரபாரதியார் கூறினர்.

மந்திரி சபையைக் கண்டித்துப் பேசியதிற்காகச் சிறையில் தன்னை அடைத்தாலும் கவலையில்லை யென்று பாரதியார் மார்தட்டி ஆவேசத்தோடு அறிவித்தார்.

கோவை ரத்னசபாபதிபுரம் முனிசிபல் பள்ளி மைதானத்தில் அமைக்கப்பட்ட மாபெரும் பந்தலில் இதுவரை நடந்திராத அவ்வளவு சிறப்புடன் முத்தமிழ் மாநாடு ஆரம்பமாயிற்று. மாநாட்டுக்காக அமைக்கப்பட்ட பந்தல், மழை ஓயாது பல நாள் பெய்தாலும் தொடர்ந்து நடத்தக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தது மாநாட்டு மேடையும் பந்தலும் வர்ணக் காகிதங்களாலும், ரப்பர் பலூன்களாலும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பொன் மொழிகள் தீட்டிய அட்டைகள் மாநாட்டுப் பந்தற் கால்களில் வரிசையாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. மேடை முன்னால் தமிழ் மறை இயற்றியோர் வள்ளுவனார் உருவப்படமொன்று வைக்கப்பட்டிருந்தது.

மக்கள் வெள்ளத்தின் சராசரி வயதைக் கணக்கிட்டால் இருபதுக்குமேல் ஒன்றோ இரண்டோதான் இருக்க முடியும். தாய்மார்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடத்தில் தமிழ்நாட்டின் கண்களெனத் திரண்டிருந்தனர் 'படித்த பெண்கள்'

சென்ற சில நாட்களுக்கு முன்புதான் கோவையில் 'தமிழர் திருநாள்' நடத்தப்பட்டது, பதவிபெற்றவர்களால் பாக்கியம் பெற்றவர்களால். அன்று விழாவில் கலந்து கொள்ளக் கட்டணம் இல்லாதிருந்தும் முத்தமிழ் மாநாட்டுக்குக் கூடியதில் ஒரு பகுதிதான் இருக்குமென்று மக்கள் பேசிக்கொண்டார்கள். முத்தமிழ் மாநாடுதான் மக்கள் ஆதரவு பெற்றிருந்ததென்பதற்குத் தக்க சான்று வெள்ளமெனத் தமிழர் கூடியிருந்ததும் அவர்களின் குதூகலத தோற்றமேயாகும்.

நிருபர்களுக்காக செய்து கொடுத்திருந்த வசதி முத்தமிழ் நாட்டுக்குத் தனிச் சிறப்புடையதாகும்.

மேடையில் தோழர்கள் ஈ. வெ. கெ. சம்பத், சி. என். அண்ணாதுரை, பேளுர்குறிச்சி சோமசுந்தரம், அ. பொன்னலனூர், இராமமீனாட்சி சுந்திரம், மூவாலூர் ராமாமிர்தம்மையார், இரா. நெடுஞ்செழியன், கா. அப்பாதுரை, வெள்ளை வாரணனுர், என் வி நடராஜன், க அன்பழகன், எ. கெ. வேலன், டி. கே. சீனுவாசன், கெ. எ. மதியழகன், சேலம் எ. சித்தையன், அண்ணல்தங்கோ, சி. பி, சிற்றரசு, சிதம்பரம், எஸ். ஜெயராமன், கெ. ஆர். ராமசாமி, உடுமலை நாராயணகவி, புட்டாசாமி, போளுர் சுப்ரமணியம், டி. எம். பார்த்தசாரதி, சென்னை நகரகௌன்சிலர் முனுசாமி, பெத்தாம் பாளையம் பழனிச்சாமி, பா. கண்ணன், முருகு சுப்ரமணியம், காஞ்சி. மணிமொழியார், சென்னை கண்ணபிரான், சி. வி. ராஜன் உள்ளிட்ட பல முக்கிய தோழர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர்.

சரியாகப் 10 மணிக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும் மேடைக்கு வந்தபோது திரண்டிருந்த மக்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் ஈ. வி. கே. சம்பத், எல்லோரையும் வரவேற்றுப் பேசியதாவது: "கோவை நகரில் இங்கு துவக்கப்பட்டிருக்கும் முத்தமிழ் மாநாட்டைப்பற்றித் தமிழர் பல பல எதிர்பார்த்து நிற்கிறார்கள். மாநாடு என்ன செய்யப்போகிறது என்பதை அறிந்து கொள்வது நம்முடைய பேராவாகவும் இருக்கிறது.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

அரபுக்கழகத்தை இஸ்லாமிய கழகமாக்குக!

பாக்கிஸ்தான் முஸ்லிம்லீக் தலைவர் யோசனை

கராச்சி, மே 29—

இப்பொழுதுள்ள அரபு லீக்குக்குப் பதிலாக இஸ்லாமியா மக்கள் லீக் ஏற்படவேண்டும் என்கிற யோசனையை பாகிஸ்தான் முஸ்லீம் லீக் தலைவர் தோழர் சௌத்திரி கலிகுஸமான் ஒரு யோசனையை தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

அரபுலீக் மீது முஸ்லிம் மக்கள் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தார்கள் ஆனால் லட்சியத்தை நிறைவேற்றுவதில் அது தவறிவிட்டது. அரபு நாடுகளிடையே தகராறுகள் ஏற்பட ஆரம்பித்து விட்டதால் எதிர்காலத்திலும் அரபுலீக் இந்த லட்சியத்தை நிறைவேற்றும் என்று சொல்ல முடியாது.

ஆகவே இன்னும் விரிவான இஸ்லாமிய மக்கள் லீக் ஏற்படுவதற்கு அரபுலீக் இடைஞ்சலாக குறுக்கே நிற்கக் கூடாது என்றே பாக்கிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் கருதுகிறார்கள்.

அப்துல்லா பிரான்ஸ் செல்வார்

பாக்தாத், மே 29 —

ஜார்டன் மன்னர் அப்துல்லாவை பிரான்சுக்கு விஜயம் செய்யும்படி பிரெஞ்சு சர்க்கார் அழைப்பு அனுப்பியிருப்பதாக இங்கு கிடைத்துள்ள செய்தி கூறுகிறது.

லெபனீஸ்- ஆர்ஜெண்டைனுவர்த்தக உடன்படிக்கை முறிவு

டமாஸ்கஸ், மே 29—

லெபனுனுக்கும், ஆர்ஜெண்டைனுவுக்கும் வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன.

சிரியாவுடன், ஆர்ஜெண்டைனு ஒரு பொருளாதார உடன்படிக்கையை செய்துகொள்வது பற்றி ஆலோசித்து வருவதாக லோனன் அயர்ஸிலுள்ள சிரிய ஸ்தானிகாலயச் செய்தி ஒன்று கூறுகிறது.

பட்டதுபோதும்; இனி படமுடியாதய்யனே!

ரஷ்யர்களிடம் அகப்பட்ட பிரிட்டிஷ் கேப்டன் புலம்பல்

லண்டன், மே 29—

எட்ருரியா 'டிராலரில்' ரஷ்யர்களால் கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் கேப்டன் ஜிம்சேப்மன் எப்படி ரஷ்யர்களால் நடத்தப்பட்டார் என்பது பற்றிய தகவல்கள் அவர் ஸண்டே டெஸ்பாச்சிற்கு அளித்த விசேஷ பேட்டியின் மூலம் வெளியிட்டிருக்கிறது.

7 நாட்கள் விடாது தன்னை ரஷ்யர்கள் குறுக்கு விசாரணை செய்தனர் என்றும், ஒரு வாரம் அவர்களிடம் இருந்ததில் தினத்திற்கு 2 மணி நேரத்திற்குமேல் அவர்கள் தூங்க அனுமதிக்கவில்லை என்றும், ரஷ்ய பாஷையில் எழுதப்பட்டுள்ள சில தஸ்தாவேஜுகளில் தன்னிடம் கையெழுத்து வாங்கப்பட்டதென்றும் அவர் கூறினாராம். நீட்டிய இடத்தில்தான் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யர்கள் ஆட்லி, சர்ச்சில் இவர்களுக்கு பொதுமக்களிடையே செலவாக்குண்டா என்று கேட்டனராம்.

தன்னுடைய 32 வயது கடல் அனுபவத்தில் இம்மாதிரி அவதி தான் பட்டதில்லை என்று அவர் கூறுகிறார்.

ஐ. நா.-வில் இடம்பெற மலான் சர்க்காருக்கு அருகதையில்லை

வட்டமேஜை மாநாடு கூடினாலும் பயனில்லை

கேப்டவுன், மே 29—

மலான் சர்க்கார் செய்து வரும் காரியங்களும் நிறத்திமிர் கொள்கைகளும், ஜனநாயக நாடுகள் மெம்பர்களாகவுள்ள ஐ. நா. ஸ்தாபனத்தில் அது மெம்பராக இருக்க லாயக்கில்லாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், ஆகவே மலான் சர்க்காரை ஐ. நா. வெளியேற்றிவிடவேண்டும் என்று தென்னாபிரிக்க இந்திய காங்கிரஸ் ஐ. நா.வை கேட்டுக்கொண்டிருக்கிறது. இனமண்டல மசோதா தென்னாப்பிரிக்க யூனியன் பார்லிமெண்டில் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வந்தபோது மேற்கொண்டு விவாதத்தை நடத்த முடியாமல் 'கில்லட்டின்' செய்ததின் எதிரொலியாகும் இது.

வட்ட மேஜை மாநாட்டில் தென்னாபிரிக்காவுடன் இந்தியாவும் பாகிஸ்தானும் சேருவதால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை என்று இக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

22 நிமிஷ நேரம் பாடும் கிராமபோன் ரிக்கார்டு

லண்டன், மே 29

22 நிமிஷ நேரம் பாடும் 12 அங்குல கிராமபோன் ரிகார்டு இன்... விற்பனை செய்யப்படவிருக்கிறது. புதாக 10 அங்குல ரிகார்டுகள் 11 அல்லது 12 நிமிஷ நேரம் பாடும். இந்த 10 அங்குல ரிக்கார்டுகளில் சுமார் 300 கோடுகள் இருக்கும். (சாதா ரிக்கார்டுகளில் 80 க்கு மேல் இராது.)

—ஆசோப்

மாலை மணி

சென்னை 30—5—50 செவ்வாய்க்கிழமை

நினைவுச் சின்னம் - - ஒரு தொத்து நோய்!

பிச்சைக்காரன் வருவான்—பார்க்கும்போதே நம் உள்ளம் உருகும்—சில சமயம் கண்களிலிருந்து இரண்டொரு சொட்டு நீர் கூட கீழே விழும். ஆனால், அவனுக்கு ஒரு காலணா கொடுக்க நமக்கு மனம் வராது. ஆனால், அதே பிச்சைக்காரனை ஒரு சிலையாக உருவாக்கி அந்தச் சிலையை நம்மிடம் அளித்தால் அதை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்கத் தயாராய் இருப்போம்.

கணவன் இருப்பான்—கெஞ்சுவான்—பரிதாபச்சிந்து பாடுவான்—மிரட்டியும் பார்ப்பான்—என்றாலும் சோறு போடக்கூட மறுத்துவிடுவாள்! அப்படிப்பட்ட இயற்கை படைத்த மனைவிமார்கள் பலருண்டு. ஆனால் அதே மனைவிமார்கள், அவர்களால் அவ்வளவு அலட்சியத்துடன் வெறுத்து ஒதுக்கப்பட்ட அதே கணவன்மார்களின் படத்தை சுவரிலே மாட்டிவைத்து, அதற்கு மலர்மாலை சூட்டி, சிலசமயம் அதற்குப் பூஜை செய்து, நைவேத்தியம் காட்டவும் தயாராக இருப்பார்கள்.

தத்தித் தத்தித் தளர்நடை நடந்தவண்ணம், குழலினும், யாழினும் இனிய மொழிகளை முழக்கியவண்ணம் தன் சின்னஞ்சிறு கண்களிலே ஓராயிரம் கவிதைகளை அடக்கிய வண்ணம், குழந்தை, ஆர்வம் ததும்பும் தோற்றத்துடன் நம்மை நோக்கி வரும்—கண்ணெடுத்தும் பார்க்கமாட்டோம்! ஆனால் அதேகுழந்தையின் எழில் உருவத்தைப் பற்றியும், அந்த உருவத்தில் நிழலாடும் உயரிய தத்துவங்களைப் பற்றியும் யாரேனும் ஒரு கவிதை தீட்டித் தரட்டும்-உடனே, அருமை அருமை என்று கூறி மோகனப் பண் பாட நாம் தயங்க மாட்டோம்!

ஆம்! சாற்றை நீக்கி சக்கையை உட்கொள்ளுவதிலே, சுளையை விலக்கித் தோலை விழுங்குவதிலே, உள்ளுறையைக் கிழித்தெறிந்து விட்டு புத்தகத்தின் மேலட்டையை மட்டும் பார்த்துப் பார்த்து மகிழ்வதிலே, சொல்லின் பொருளை மறுத்துவிட்டு வெறும் சொற்களை மட்டும் போற்றிப் புகழ்வதிலே இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மக்களுக்கு ஈடு இணை கிடையாது. ஒப்பு உயர்வு கிடையாது.

வேதம் சொன்னது என்பதற்காக ஒன்றை நம்பாதே—முன்னோர் சொன்னது என்பதற்காக ஒன்றை நம்பாதே—கடவுள் சொன்னது என்பதற்காக ஒன்றை நம்பாதே-அவர் தம் அடியார் சொன்னதுஎன்பதற்காக ஒன்றை நம்பாதே—உன் உள்ளம் என்ன சொல்லுகிறது — உன் பகுத்தறிவு எதைக் கூறுகிறது-ஆராய்ச்சி என்னும் உரைகல் எதை நம்பச் சொல்கிறது-அவற்றை மட்டும் நம்பு என்று அறிவுரை புகன்றார் புத்தர், ஆனால் அதே புத்தரைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்லிக் கோள்பவர்களிற்பலர் புத்தருக்குச் சிலை அமைக்கிறார்கள் கவிதை பாடுகிறார்கள். காவியம் தீட்டுகிறார்கள், கதைகள் எழுதுகிறார்கள். ஆனால் அவருடைய சொற்களை அலசி ஆராய்ந்து பார்க்கமட்டும் அடியோடு மறுக்கிறார்கள்.

திருமூலர் கவிதையல்லவா கவிதை! அவருடைய புத்தகமல்லவா புத்தகம்! அந்தத் திருமந்திரம் அல்லவா திருமந்திரம் என்று போற்றுவார்கள்! ஆனால் அப்படிப் போற்றுபவர்களிலேயே பலர், மக்கட் பணியே மாதேவன் பணி என்று திருமூலர் தீட்டிக்காட்டினார் சிறந்த கருத்துரை, அதைமட்டும் பின்பற்ற மாட்டார்கள்.

திருக்குறள்தானே! நேக்கு நன்னா தெரியுமே! தட்சண வேதமன்னோ அது! “திவ்ய சாஸ்திரமாச்சே என்று திருவாய் மலர்ந்தருளுவர் ஆனால் அப்படி ஆனந்த மொழிகளை வீசும் ஆரியக்கலைவாணர்களில் ஒருவர் கூட‘ “பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்” என்று தெளிவுரை புகன்றிருக்கிறாரே திருவள்ளுவர், அந்த உரையை ஒப்புக்கொண்டு, சாதிபேதத்தின் சின்னமாகத் தம் மார்பிலே ஜொலிக்கும் முப்புரிநூலை அகற்ற மனம் துணிய மாட்டார்கள்.

இராமலிங்கர் வாழ்க-இராமலிங்கர் வாழ்க என்று ஓயாமல் ஒலிப்பார்கள்! அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி என்று நாள் தவறாமல் முணுமுணுப்பார்கள்! ஆனால் அவர்கள் “வேதாகமங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர்—வேதாமகத்தின் விளைவறியீர்-வேத ஆகமங்கள் என்பவெலாம் சூது ஆகச் சொன்ன(வை) அல்லால், உண்மை வெளி தோன்ற உரைத்தல் இலை. என்ன பயனோஇவை?” என்று வீர முழக்கம் புரிந்தாரே அந்த சீர்திருத்தச் செம்மல், அதை மட்டும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்

இது இந்தத் துணைக்கண்டத்து மக்களின் பரம்பரைப் பண்பு. இந்தப்பண்பு, விஞ்ஞான ஒளியும் பகுத்தறிவு மணமும் உலகெங்கும் பரவியுள்ள இந்தக்காலத்திலும் அன்று கண்ட மேனிக்குச் சிறிதும் அழிவில்லை என்று கூறுகிறார்களே, அதுபோன்ற முறையில், இன்னமும் அப்படியே இருந்துகொண்டுதான் இருக்கிறது

இந்தப்பண்பு, மற்றவர்களைவிட பாரதபுத்திரர்களிடம் மிகமான அளவுக்குக் காணப்படுகிறது ஏனைய பிரச்சினைகளைவிட மறைந்த உத்தமர் காந்தியாரைப்பற்றிய பிரச்சினையில் இந்தப்பண்பு ஏராளமாகவும் தாராளமாகவும் காணப்படுகிறது

காந்தியார் வகுத்த வழி—தீட்டிய திட்டம் — அளித்த கருத்து — நடத்துகாட்டிய முறை — சொல்லிச்சென்ற அறிவுரை — இவற்றையெல்லாம் காங்கிரஸ் கனவான்கள் முற்றிலும் மறந்துவிட்டனர். ஆனால் அவருக்கு மண்டபம் அமைப்பதிலேயும், உருவச் சிலை நாட்டுவதிலேயும், காவியம் தீட்டுவதிலேயும், கவிதைகள் இயற்றுவதிலேயும் மட்டும் பெருத்த ஊக்கமும் பேராரவாரமும் காட்டுகின்றனர். சாதாரணத்தொண்டர்கள் மட்டுமல்ல — சர்வதேசப் புகழ் பெற்ற தலைவர்கள் கூட அதிகாரம் அற்ற ஏழைக் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல—நாடாளும் நல்ல தம்பிகளாக உள்ள மேன்மை தங்கிய மந்திரிமார்கள் கூட. இந்தக் கருத்தற்ற காரியத்தைச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்! கனபாடிகளின் ஏடு ‘கல்கி’ மட்டுமல்ல, இனம் பொருந்திய சர்தார் வல்லபாய்படேல் அவர்களும் இதைத்தான் செய்கிறார்! அர்த்தமற்ற செயல்—அதை செய்வதிலேதான் அவர்களுக்கு அளவற்ற ஊக்கம் இருக்கிறது.

குஜாரத்பகுதியில், போர்பந்தர் எனும் இடத்தில், 9200 சதுர அடி உள்ள நிலப்பரப்பை, ரூ. 20,000 கொடுத்து விலைக்கு வாங்கி, அந்த நிலத்தின் மீது ஏராளமான பணத்தைச் செலவு செய்து, ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தைக் கட்டியிருக்கிறார் நஞ்சி காலிதாஸ் எனும் ஓர்வடநாட்டுக்காரர். அதைக் கட்டியிருப்பதற்குக் காரணம், அப்படி ஒரு கட்டிடம் கட்டினால்தான், மாவீரர் காந்தியாரின் புகழ்நினைவுநாட்டப்படும் என்று அவர் தவறுகக் கருதிக்கொண்டதுதான்!

இந்த எண்ணம் தவறானது! தவறுவது மட்டுமல்ல, உத்தமர் காந்தியாரின் பெயருக்கே இழுக்குத் தேடுவது! காந்தியார் பெயருக்கு இழுக்குத் தேடுவது மட்டுமல்ல, நினைவுச் சின்னம் நாட்டுவது எவ்வளவு பொருளற்ற வீண் செயல் என்பதை எழில் பட எடுத்து விளக்குவது!

ஆம்! பித்தத்தின் முதிர்ச்சியோ அன்றி சித்தப் பிரமையால் விளைந்த அதிர்ச்சியோ எனத் தகும் தன்மையதுதான் காந்தியாரின் கருத்துரைகளை மறந்துவிட்டு அவருக்கு நினைவு மண்டபம் நாட்டும் இச் செயல் என்றாலும் இச் செயலைத்தான் மனமனமார ஆதரித்து, வாயாரப் பாராட்டி, ஆனந்தத்துடன் மண்டபத்தைத் திறந்து வைத்திருக்கிறார் அன்பர் சர்தார் வல்லபாய்

தகுமா?

முறையா?

ஒரு பெருந் தலைவர் செய்ய வேண்டிய ஒப்பற்ற செயலா இது?

இரும்பு மனிதர் என்று புகழப் படும் எழில் அரசரா இதனைப் புரிவது?

ஊருக்கு ஊர் காந்தியாருக்கு நினைவு மண்டபம் எழுப்பி விடுவதாலேயே, அவருடைய அருங்கொள்கைகளை மறந்தும் துறந்தும் வாழும் தங்கள் விபரீதப் போக்கு, மக்கள் மனக் கண்ணைவிட்டு அகன்றுவிடும் என்று சில தேசீயவாதிகள் தவறான எண்ணம் கொண்டால் அதை அரும்பெருந் தலைவர் எனப்படும் இந்த ஆற்றல் வீரர் ஆதரிக்கலாமா?

நினைவுச் சின்னம், ஒரு தொத்துநோய்! தீராத மூட நம்பிக்கை! நெடுங்காலமாக இந்தியாவை வாட்டி வதைக்கும் கூர்வாள்! பல பெருந்தலைவர்கள்—சீர்திருத்தச் செம்மல்கள்—தீர்க்கதரிசிகள்—புதுப் பாதை கண்டவர்கள் ஆகியோரின் அறிவுரைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் வீரவெட்டியான்!

இத்தகு தன்மை படைத்த நினைவுச்சின்ன ஏற்பாட்டை சர்தார் படேல் ஆதரித்திருப்பது தவறு— பெருந்தவறு — மறக்க முடியாத தவறு என்பது நம் அழுத்தந்திருத்தமான கருத்து.

காங்கிரஸ் பஞ்சாயத்து தேர்தல்

நெசவாளர் பட்ட அவதி

சங்கரன்கோயில், மே 25—

இங்கசர் காங்கிரஸ் கிராம பஞ்சாயத்து தேர்தல் 25-5-50 5. 6. வார்டுகளுக்கு முசாபரியங்களாவில் காலை 8-மணிக்கு நடைபெறவிருந்தன. இரண்டு வார்டுகளுக்குத் தேவை 4-பேர் அப்ளிகேஷன் சுமார் 13 வரை கொடுக்கப்பட்டிருந்தன. பின் பலர் வாபஸ் வாங்கப்பட்டனர். மீதமுள்ளவர்களுக்கு தேர்தல் நடக்கவிருந்தன. ஆனால் காங்கிரஸ் தோழர்களுக்குள் ஏழு வினராக பிரிக்கப்பட்டு மனவேற்றுமையாகஇருந்ததாகத் தெரிகிறது.

தொழிலாளி வீதியில் உறைப்பவரும், ஏழை நெசவாளியுமான தோழர்கள் பி. லெட்சுமணமுதலியாருக்கும், எஸ்.டி. சண்முகமுதலியாருக்கும் 6. 5 வார்டு நெசவாளிகள்கள் வாக்குரிமை அளிக்க முன்வந்திருந்தனர் பெண்கள் உட்பட. இதைக்கண்ட காங்கிரஸ் தோழர்களுக்கு பொறாமை ஏற்பட்டு நெசவாளிகளை தாக்கிப் பேசியும் திட்டியும் கலகத்திற்கு இழுத்ததாகத் தெரிகிறது. உடனே குண்டர் படைகளுடன் காங்கிரஸ்தோழர்கள் பல நெசவுத்தொழிலாளிகளை தாக்கினர் இதனால் சுமார் 20 பேருக்கு மேல் காயமேற்பட்டதாகத் தெரிகிறது. ச. சண்முக முதலியாரின் கால் எலும்புநொறுங்கி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். அனைவரும் தர்மமான ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

நியூஜிலாந்தில் வெள்ளக் கொடுமை

ஒரே நாளில் 16 அங்குல மழை!

ஆக்லாண்ட், மே 29—

நியூஜிலாந்தின் வடக்கு கடற்கரைப் பிரதேசத்தில் கடும் மழை பெய்ததின் விளைவாகப் பெரும்வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. சில ஜில்லாக்களில் சென்ற 4 நாட்களில் 32 அங்குல மழை பெய்திருக்கிறது.

இங் நகரங்களில் ஒரே நாளில் 16 அங்குல மழை பெய்திருக்கிறது. நதிகளில 14 அடி தண்ணீர் அதிகம் வந்ததால் அநேக பாலங்கள் ரஸ்தாக்கள்பழுதாகிவிட்டன. பல இடங்கள தண்ணீரில் அமுங்கியிருக்கின்றன

கால நஷ்டச்சேதம் பெரும் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை கிடைத்துள்ள தகவலில் ஒருவர் மட்டும் மாண்டதாகத் தெரியவருகிறது.

தெ. கி. ஆசியாவுக்கு ஜப்பான் இயந்திரங்கள்

லண்டன், மே 29—

தென் கிழக்கு ஆசியாவுக்கு ஜப்பானிய இயந்திரங்களின் ஏற்றுமதி மிகவும் அதிகரித்திருக்கிறதென்றும், ஆர்டர்மேல் ஆர்டர் குவிவதால் அவைகளை சமாளிக்க முடியாமல் ஜப்பான் திணறுகிறதென்றும் ‘சண்டேடைம்ஸ்’ டோகியோ நிருபர் கூறுகிறார்.

இதற்கு ஜப்பானுக்கு ஐ. நா. வின் ஆதரவு பூரணமாக இருக்கிறது. அதிக ‘பவர் ஜெனரேடர்’ ஜவுளி மில், கப்பல்கள், என்ஜின், தொழிற்சாலைகளுக்கான இயந்திரம் முதலியவைகளுக்கான ஆர்டர் இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன், பர்மா ஆகிய நாடுகளிடமிருந்து கிடைத்திருக்கிறது.

மத்திய கிழக்குக்கு ஆயுத உதவி

பத்திரிகைகள் கருத்து

கெய்ரோ, மே 29—

மத்திய கிழக்குக்கு ஆயுத உதவிபற்றி மூவர் மாநாடு செய்த முடிவு மத்திய கிழக்கு பத்திரிகை சிலவற்றால் ஆதரிக்கப்பட்டிருக்கிறது. சிலவற்றால் கண்டிக்கப்பட்டிருக்கின்றன.

கெய்ரோவின் பிரபல பத்திரிகையான ‘அக்பர் எல்யோம்’ இதைப்பற்றி எழுதுகையில் ‘இது மரண தண்டனை விதிப்பது போன்றது’ என்று எழுதியிருக்கிறது. அவர்கள் எதிரியான ரஷ்யாவை தாக்குவதற்கென்று ஆயுத உதவி செய்ய முன்வருகிறார்களே ஒழிய அவர்கள் நண்பனான இஸ்ரேலை தாக்குவதற்காகவல்ல என்று எழுதியிருக்கிறது. இதர கெய்ரோ பத்திரிகைகள் ஆயுத உதவி முடிவைப் பாராட்டி எழுதியிருக்கின்றன. ஜார்டன் ஸிரியா முதலிய நாடுகளும் ஒரு விதத்தில் இதை வரவேற்பதாகவே தெரிகிறது.

ஆசிரியர்கள் வெளியேறவேண்டுமாம்

கேப்டவுன், மே 29—

தென்னாப்பிரிக்காவில்இப்பொழுதுள்ள ஆசிரியர்கள் எல்லாரையும் வெளியேற்றிவிட வேண்டுமென்று மூடக்கல் சட்ட அமுல் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

அக்கமிட்டியின் சிபார்சுகள் சென்ற சனிக்கிழமையன்று பிரசுரிக்கப்பட்டன.

தென்னாப்பிரிக்காவிலிருந்து அடியோடு வெளியேற்றப்படவேண்டியவர்களான ஆசியாக்காரர்கள் தனியாகவே ஒதுக்கிவைக்கப்படவேண்டும் என்றும் எங்கெல்லாம் வெள்ளையல்லாதார்கள் அத்துமீறி குடியேறியிருக்கிறார்களோ அவர்களை எல்லாம் கிளப்பவேண்டும் என்றும் இக்கமிட்டி சிபார்சுகளைக் கூறியிருக்கிறது.

டாமிஸ்கஸ், மே 29—

ஸிரியாவில் கௌனு, ஜெஸ்லிரியா ஆகிய இடங்களில் ஏராளமாக எண்ணெய் அகப்படுகிறதென்பதை ஸிரிய ஆயில் கம்பெனியைச் சேர்ந்த நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கொங்குநாட்டில் முத்தமிழ் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் முதறிஞர் நாவலர் சோமசுந்தரபாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவர்களும் மற்றும தமிழ் கற்ற அறிஞர்களும் இங்கு கூடியுள்ளார்கள்.

மாநாடு நடத்த இரண்டு மாதங்களாக முயன்றோம்; இன்றுதான் அந்த முயற்சி உருவாகியுள்ளது. பொதுமக்கள் இந்த மாநாட்டிடமிருந்து பல எதிர்பார்ப்பதுடன் நோக்கத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறார்கள். கோவை தனிச்சிறப்பு பெற்றுள்ளது; சென்ற சில நாட்களுக்கு முன்புதான் இங்கு தமிழத் திருநாள் நடந்தது. இன்று முத்தமிழ் மாநாடு மாநாடுகளின் கூறிப்வற்றை ஆராய்ந்து அலசிப் பார்த்து சிந்திக்கக்கூடிய வாய்ப்பு கோவை மக்களுக்குக் கிடைத்துள்ளது. இம்மாநாடு ஒரு குறிப்பிட்ட கட்சிப் பிரசாரத்துக்கு அல்ல; பெரியவர்களெல்லாம் கூடிச் செய்த வேலைக்குப் போட்டி வேலையுமல்ல; முத்தமிழ் மாநாடு கூட்டவேண்டுமென்று நம் மனதில் ஒரு ஆசை தோன்றிற்று; அவர்கள் உள்ளத்திலும் அப்படித்தான். ஆனல் ஒன்றுகூடி மாநாடு நடத்தவில்லை; அவர்கள் தமிழ் வளர்ச்சி மாநாடுகூட்டி வெற்றி கண்டார்கள்; நாம் கூட்டியுள்ளோம் வெற்றி காண. இது அறிஞர் அண்ணவின் தனிப்பட்ட செய்கையாக யாரும் கருதவேண்டாம் இங்கு கூடியுள்ள அவ்வளவு பேரும் முத்தமிழ் வல்லவர்கள் அல்ல. ஆனல் தமிழின் பால் காதல் கொண்டவர்கள் தமிழ் நலிவடைந்துள்ளது. நசுக்கப்பட்டு வருகிறது என்ற துக்கச் செய்தி கேட்டு இங்கு கூடியுள்ளோம்; அறிஞர்கள் நமக்குத் தகுந்த வழி வகுத்துத் தருவார்கள்.

தமிழர் பகைவர்கள் தமிழை அழிக்கத் திட்டம் தீட்டிவருகிறார்கள். மாண்டுபோன சமஸ்கிருதத்தை மீட்க செத்த மொழியை உயிர்ப்பிக்க முடியாததால், சமஸ்கிருதத்துக்கு அடுத்தாற்போல் தமிழுக்குக் கல்லரைக் கட்டபார்க்கிறது ஒரு கூட்டம். பதவி அவர்களிடம், அதன் காரணமாகக் கேட்டறியாத கொடுஞ்செயல் செய்கின்றனர். பாரதியாருடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்த போது கூறினர்கள். "சோறு உண்ணதே, உடை உடுக்காதே" என்று கூறும் சர்க்காரைக் கண்டதே இல்லையென்று.

நாமனைவரும் சேர்ந்து சொந்த வாழ்க்கையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அக்கரையுடன் பொறுப்புடன் தமிழகத்துக்குப் பாடுபடவேண்டும். மாநாட்டை திருவிழாவாகக் கருதாதீர்கள் திட்டம் தீட்டும் ஆலோசனைக் கூட்டமாகக் கருதுங்கள்" என்று கூறி நாவலர் சோமசுந்தரபாரதியாரை மாநாட்டைத் திறந்து வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

தமிழ் நாட்டு முதறிஞர் நாவலர் சோமசுந்தர பாரதியார் முத்தமிழ் மாநாட்டைத் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவவது:— அறிஞர்களே! அன்பர்களே! இந்த முத்தமிழ் மாநாடு கோவையில் கூட்டப்படுகிறதென்றும், நான் அதைத் திறந்துவைக்க வேண்டுமென்றும், ஓழிவிலொடுக்கம் தேடிக்கொண்டுள்ள எனக்கு அழைப்பு வந்தது. புத்துணர்ச்சி வேண்டிய இக்காலத்தில் இளைஞர் ஒருவரைக் கூப்பிடுங்கள் நான் வேண்டாம் என்றேன்; விடவில்லை. தமிழகம் படுத்தப்படும் பாட்டைக் கண்டு பணியை ஏற்றுகொண்டேன்

நாற்பதாண்டுகளாகக் காங்கிரஸ் தொண்டனக இருந்தேன் அவ்வளவு பக்தியுடன் இருந்த நான் காங்கிரசை விட்டு வெளியேறினேன். நான் எந்தக் கொள்கைக்காக காங்கிரசில் இருந்தேனே, அக்கொள்கைகள் மாறத்தொடங்கின. இட்ட கட்டளை ஏற்று நடத்தும் நிலை வந்தது அவ்வாறு செய்யும்படி வற்புறுத்தினர்கள். தூத்துக்குடி வரை காந்தியாரை இழுததுவந்தவன் நான். ஆனல் மாறுபட்டேன் அவருடைய எண்ணத்தில். கதர் உடை கட்டவேண்டுமென்று அவர் கூறினர். கட்டாயப்படுத்காதீர்கள் உங்களுக்கு உரிமை இல்லையென்று கூறினேன். ஏறவில்லை என் சொல்; அன்றே காந்தியாருடன் எனக்கு மனமாற்றம் ஏற்பட்டது. பின்பு இந்தியைத் தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக்கினர்கள். அப்பொழுதுதான் மனம் பொறாமல் காங்கிரசிலிருந்தே விலகிக் கொண்டேன். சொல்கேட்டு அடிமைவாழ்வு நடத்துவதை விட விலகி நிற்பதே மேல் என்று உணர்ந்தேன் காந்தியார் உள்ளிட நான் யாரையும் கடவுளாக்க விரும்பவில்லை. (கைதட்டல்)

"ஈண்டு கூட்டப்பட்டுள்ள முத்தமிழ் மாநாடு அரசியல் கலப்பற்றதென்று கூறியதால் தான மாநாட்டில் கலந்து கொள்ள இசைந்தேன்.

"தமிழன் அடிமைப்பட்டுக் கிடந்தான் என்பதற்கு வரலாற்றில் ஒரு சிறுமேற்கொள் கூடககாட்ட முடியாது. சங்க நூற்களைப் புரட்டிப் பார்த்தால், தமிழ் நாட்டில் எல்லோரும் சைவசித்தாந்திகளுமில்லை வைஷ்ணவ சிகாமணிகளும் இல்லை. அறிவுக்கு ஒட்டிய ஆராய்ச்சிக்குட்பட்டதாகவே தமிழர் பழக்க வழக்கங்கள் இருந்தன.

ஆரியர்-தமிழர் பகை ஏற்பட்டதற்குக் காரணம், தமிழின் உன்னத பகுதிகளையும் பாராட்டாமல் தேவமொழியென்று கூறி சமஸ்கிருதத்தைப் புகுத்தினர்கள். உண்மைத் தமிழர் எதிர்ததார்கள். பட்டேல் கூறுவது எனக்கு என்றும் பிடிக்கமானதாக இருநததில்லை. இன்று அவர் கூறுகிருர், இந்தியாமுழுவதும் இந்தி கற்று ஒரே கலாச்சாரம் ஒரே மொழியாகக்கொண்டு வர வேண்டுமென்று. களிமண்ணை கசக்கி சட்டிசெய்து விட; வேறுபாடு இருக்கிறது; இந்தி கட்டாயமாகப் படி யென்று வற்புறுத்தினல் உங்கள் ஆட்சிக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டிவரும்.

அன்னியன் ஆண்டகாலத்தில்கூட நெருக்கடியானபோர் நேரத்தில்கூட உண்ணதே உடுக்காதே என்று கூறிய இல்லை. நான் அரசியல் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம்; ஏன் இந்த மானங்கெட்ட நிலையை நாட்டில் உண்டாக்கி வேறுபாடு இல்லையென்று மட்டும் கூறிவருகிறீர்கள். நாடு முழுவதும் ஒன்று என்று கூறினல் பாகிஸ்தான் பிரிபானேன் தமிழ் இல்லை தமிழன் இல்லை என்று கூறுவது பட்டேல் துரைக்கு நாம் அடிமைகள் ஆக்கப்படுகிறோம் யென்று பொருள். நம சுதந்திர உணர்ச்சி நசுக்கப் படுவதை நாம் பார்த்துக் கொண்டா இருக்க முடியும்?

மற்றவர் சொல்லும் சித்தாந்தம் பிடிக்கவில்லையென்று கூறுவதற்காக என்னை நாத்திகன் என்று கூறினல் நான் அதை ஏற்கத் தயார். தமிழ் கற்கப்பட்ட நாளில் தமிழுக்கு உயர்வு கொடுக்கப்பட்ட நாளில் தமிழன் உயர்ந்திருந்தான் தமிழ் கற்ற நன் ஆங்கிலமும் சோந்து கற்றேன் உண்மை கூறுகிறேன் ஆங்கிலம் அதிகம் படிக்கப் படிக்கத்தான் தமிழ்மீதுஎனக்குப் பற்று வளர்ந்தது.

உடல் அடிமைத்தனம் வெறுக்கத்தக்கதல்ல. உடல் அடிமைத்தனம் ஏற்பட்டிருந்தால்கூட அதைப் பெற நான் முயன்றுகொண்டே இருப்பேன், நான் காந்தியார் போன்ற துறவி அல்ல. அதை விடக் கேவலமானது மனதை அடிமை வைப்பது. கோமுசி. ராஜகோபாலாச்சாரியார், நாமக்கலலார் உள்பட பாரதியாரை வாழ்த்துகின்றனர் அவர் கூறுகிறார் 'என்று மடியும் இந்த அடிமையின் மோகம்" என்று கூறுகிறார் இதற்கு என்ன தொடர்பு என்று கேட்கலாம். மொழியின் இயல்புதான் மக்கள் இயல்பு. ஆகையால் மொழி அடிமைப்படுவதை நாம் சகித்துக்கொண்டே இருக்க முடியாது.

இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகியமூன்றுக்கும் பெருமை தந்தான். தமிழன் அதனல்தான் இன்று முத்தமிழ் மாநாடு. நடைபெறுகிறது தொல்காப்பியரை நச்சினர்க்கினியர் கண்ணுடிகொண்டு படிக்கின்றனர் தமிழ்ப் பண்டிதர். கடவுளுக்கு ஆறுமுகம் உள்ளது, 12 கையுள்ளது என்று கூறுவது எவ்வளவு பொய்யோ அதுபோலத்தான் நச்சினர்கினியார் உரையும். தொல்காப்பியத்தை என்னவென்று ஆராயாமல் இயல் தமிழ் என்று கூறுவர் பண்டிதர்கள். **தொல்காப்பியம் ஒரு முத்தமிழ் நூல்; இதை நீங்கள் நன்கு ஆராயவேண்டுவது அவசியமாகும்.**

வடமொழியை எடுத்துக் கொண்டு தமிழை மறக்கடிக்க முயற்சி செய்யப்பட்டது இக்காலம். தமிழ் வார்த்தைகளை வடமொழி வார்த்தைகளோடு குழப்பி தமிழுக்கு ஆரியப் பொருள் தரப்பட்டது பலபேரால்.

எனக்கு 14 வயதில் திருமணம் ஆயிற்று ஐயர் இல்லாமல். மருண்டனர் என் பெற்றோர் தமிழர் ஒருவரை அழைத்து மணத்தை நடத்தும்படிக் கூறினேன். அவர் சமஸ்கிருத மந்திரம் சொல்ல ஆரம்பித்தார் அவரையும் வெருட்டிவிட்டு என் திருமணத்தை நானே செய்துகொண்டேன். இதற்கு உணர்ச்சிதான் காரணம். அந்த நாளிலேயே எங்களில் பலர் அவ்வாறு செய்து வந்தோம். அவ்வாறு உணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் தமிழ் இளைஞர்கள்.

சிவக்கூடத் தென்னாட்டவனுக இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் தென்னுடைச் சிவனை 'வடநாட்டில் வாழ்வோனே போற்றி" என்று எழுதி வைத்தார்கள்.

இந்தியா என்றும் ஒரு குடைக் கீழ் இருந்ததில்லை, தமிழ்நாடு என்றும் தனிக்கே இருந்தது. நாட்டை ஏதோ காரணத்தால் ஒனறு படுத்தி இன்று தமிழ் நாட்டில் தமிழ் படிப்பது கட்டாயபாடமில்லை ஆனல் இந்தியைக் கட்டாயம் படிக்கவேண்டுமென்கிறார்கள் தமிழ் கல்லாதவர்கள் மந்திரியாக இருப்பதால்தான் இந்தக் கோளாறு. மெய்யான தமிழ்ப் பற்றுள்ளவன் தமிழ் நாட்டில் மந்திரியாக இருக்க வேண்டும். கவைக்குதவாத மந்திரிகள் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தால் பொதுமக்கள் அவர்களுக்கு மாலை போட்டு வரவேற்பதை விடுத்து அவர்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டும். மாலை போட்டு வரவேற்றல் தலைமேல் ஏறித்தான் மிதிப்பார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பிரகிகளுக்குஎள்ளளவேனும் மதிப்புத்தருவதில்லை. கயேச்சையுள்ளம் படைத்த தமிழ்ப்படித்தோருக்கு அவர்கள் சிறிதும் மதிப்புத்தருவதில்லை. அறிவைக் கெடுக்கக்கூடிய புராணங்கள் தமிழ் நாட்டு நூல்களில் புகுந்த பின்புதான் தமிழ் கெட்டது. அறிவு விலக்கப்பட்டதால் நாம் அடிமைப்பட்டோம்.

தமிழை வளர்ப்போம்; மாநாடு கூட்டுவதால் மட்டும் போதாது. இதனல் தமிழ் வளரவே வளராது. உண்மையில் வளர்க்க வேண்டுமானல் வாழ்க்கையில் நாள்தோறும் எழுத்திலும் சொல்லிலும் தமிழை மேற்கொள்ள வேண்டும். தடித்த அன்பு தமிழின மீது வைத்தாக வேண்டும்.

மற்றும் தமிழை அகத்தியன் என்ஒருவன் வளர்த்தான் என்று கூறப்படுகிறது. மொழியை ஒருவன் வளர்க்கவே முடியாது. தமிழ்மொழி வளர்த்தவன் அகத்தியன் என்று கூறிய அதே புராணங்கள் "தமிழ் நாட்டுக்குப்போ" என்று சிவனல் பணிக்கப்பட்ட அகத்தியன், தமிழர் சிறப்பு பற்றியறிந்திருந்ததால் நடுங்கிவிட்டதாகக் கூறுகின்றன. கம்பன்கூட அகத்தியனைப்பற்றி "என்றுமுள்ள தமிழ் மொழியை இயம்பி இசைகொண்டான்" என்று கூறியுள்ளான்.

"முன்னேற முயலுங்கள். தமிழ் நாட்டை முன்னேற்றுங்கள், அதற்குச் சலியாமல் உழையுங்கள்; இவ்வாறு ஏதோதோபேசுகிறேன் என்று சென்னை சர்க்கார் என்னைச் சிறையில் வேண்டுமானல் அடைக்கட்டும். அதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலை இல்லை.

தமிழ் வாழ்க என்று கூறியல்ல, தமிழா வாழ்க என்று கூறி தமிழ் வளர்க்க உறுதி பூணுங்கள் என்று வணங்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்" என்று சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்துவைத்தார்

"முத்தமிழ் மாநாடு வாழ்க" என்று உடுமலை நாராயண கவி இயற்றிய பிரத்தியேக பாடலை நடிப்புப் புலவர் கெ. ஆர். ராமசாமி இசைப் பண்ணோடு இசைந்து மக்களை மகிழ்வித்தார்.

தலைமை தாங்கி முத்தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தித்தர வேண்டுமென்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை வேண்டிக்கொண்டு தேமூர் இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவாவது:—"இன்று முத்தமிழ் மாநாட்டுக்குத் தலைமை தாங்க புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்தான் அதிகப் பொருத்தம் உள்ளவர். எங்கள் வாழ்வு மங்காது 'சங்கு முழங்குபவர்" பாரதிதாசன். அவர் வாழ்க்கையில் புரட்சிக் கண்டவர்; மற்ற புலவர்களுக்கு நடுக்கம் தரக்கூடிய செயல்கள் புரட்சிக் கவிஞர் சாதாரணமாக கைக்கொளபவர். அவருடைய எழுத்தில் வீரம் செறிந்திருக்கிறது; ஆண்மை செறிந்திருக்கிறது. வலிமை வாளேங்கி நிற்கிறது எளிமை குடிகொண்டுள்ளது; வனப்பு நடனம் புரிகிறது. காலத்துக்கேற்ற கருத்து அவருடைய கவிதை ஒவ்வொன்றிலும் மிளிருகின்றன. எதற்கும் வளைந்துகொடுக்காத வீரத் தமிழர் பாரதிதாசன். அவரே தலைமைதாங்கத் தகுதிவாய்ந்தவர்" என்று கூறி முன்மொழிந்தார்.

பொன்னம்பலனர் பின்மொழிகையில், பாரதிதாசன் காளி அருள்பெற்றவர் என்று கூறிக்கொள்பவர் அல்லவென்றும், காலத்துக்கும் கருத்துக்கும் தேவைக்கும் ஏற்றபடி பாடல் அமைப்பவர் என்று கூறினர். "காலை தூக்கி நின்றமே தெய்வமே கடைத்தேற வேண்டுமையே" என்று "வாழ்வது மாயம் மடிவது திண்ணம்" என்று பாடினல் நாடு உருப்படாதென்றும் பாரதிதாசன் புத்துலகத்தின் கவியென்றும் கூறி மாநாட்டுக்குத் தலைமை தாங்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

கைத்தட்டல் ஒலி பக்கத்திலே இருந்த மலைகளில்பட்டு எதிரொலிக்க புரட்சிக் கவிஞர் மாநாட்டுத் தலைமைப் பீடத்தில் அமர்ந்தார்.

இலங்கையில் பௌத்தர் மாநாடு

"உலக வாழ்வுக்கு அவசியமான போதனைகள்"

—(0)—

புத்தர் வழி நிற்கும்படி மக்கட்கு வேண்டுகோள்

"நிசைகாட்டியை இழந்த மாலுமி தவிப்பதுபோல நாங்கள் தவித்துக் கொண்டிருக்கிறோம். அபூர்வமான தொரு நிவாரணம் தேடி ஏங்கிக் கொண்டிருக்கிறோம். இரு பெரும் காரபட்சத்தில் ஏமாற்றமும் பயமும் வந்து உலகத்தைக் கவிந்து கொள்ளுகின்றன. இப்படியான தொரு சமயத்தில்தான் வேறெக் காலத்தையும்விட புத்தர்பிரான் போதித்த அடிப்படைத் தத்துவங்களை நாம் நினைத்துப்பார்க்கவேண்டியது அவசியமாகிறது"

என்று இந்திய பிரதமர் பண்டித நேரு இலங்கையில் நடைபெறும் பௌத்த சகோதரத்துவ மாநாட்டிற்கு நேற்று அனுப்பிய ஆசிச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் அதில் கூறியுள்ளதாவது:—

புத்தரது போதனைகளை எண்ணவும், நிரிவாக்கையில் கடைபிடிக்கவும் இம்மாநாட்டு நடவடிக்கைகள் மக்களை மேலும் தூண்டவேண்டும் என்ற எனது விருப்பத்தையும் ஆசியையும் பௌத்த சகோதரத்துவ மாநாட்டிற்கு அனுப்புகிறேன். இந்தப் போதனைகள் உலகுக்கு எந்தக்காலத்திலும் தேவைப் பட்டே வந்திருந்தபோதிலும் நாம் வாழும் இந்த சகாப்தத்தைப்போல அதற்கு வேறெப்பொழுதும் தேவையிருந்தது கிடையாது"

பௌத்த சகோதரத்துவ மகா நாட்டுக்கு வந்த 27 வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் நேற்று மாலை குதிரைப் பந்தய மைதானத்தில் ஒரு பொது வரவேற்பு அளிக்கப் பட்டது. பல ஆயிரக்கணக்கானவர் கலந்துகொண்ட இந்த வைபவத்துக்கு தோழர் டி. சேனாநாயக தலைமை வகித்தார்.

பிரதிநிதிகளை ஸ்தல ஸ்தாபன மந்திரி தோழர் பண்டாரநாயக்க வரவேற்றுப் பேசினார்.

பர்மியப் பிரதமர் தாகின்நூவிடமிருந்து வந்த செய்தியும் வாசிக்கப் பட்டது.

புத்தமதத்தின் நீண்டகால வரலாற்றில் முதல் முறையாக பௌத்தர்களின் உலக சகோதரத்துவ மகாநாடு விவாதமன்று கண்டியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதை கொட்டிதலதா மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் 27 வெளிநாட்டுப் பிரதிநிதிகளான ஆண்களும் பெண்களும் பிரசன்னமாயிருந்தனர். பௌத்தர்களில் உலக சகோதர ஸ்தாபனம் ஸ்தாபிக்கும் தீர்மானம் பிரரேபணை செய்யப் பட்டு நிறைவேறியது.

தர்ம அடிப்படையில் சமாதானம் காணும் தீர்மானமொன்றை ஆதரித்து ஜப்பானிய பிரதிநிதி சிவி ஷஹாயாமா பேசியபோது அவரது கண்களில் நீர் மல்கியது. 27 நாடுகளிலிருந்தும்வந்த நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் "சாது" சங்கீர்த்தனம் செய்து கொண்டே இந்த தீர்மானத்தை ஆதரித்தனர். "ஹிரோஷிமாவின் குருவாக செத்தொழிந்தவர்களின் சார்பாக உலக சமாதானம் ஏற்படுத்த வேண்டுமாய்க்கேட்கிறேன்' அணுகுண்டின் கோரத்தை நாங்கள் மட்டுமேதான் அனுபவித்தோம். இந்த அநாபலம் இன்னொரு தேசமக்களுக்கு மற்றொருமுறை ஏற்படக்கூடாது என்றே நான் அல்லும் பகலும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்" என்று அவர் பேசியபோது கூறினார்.

இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் பேசுகையில் உலக சமாதானம் ஏற்படவேண்டுமானால் பிரசங்கங்களை மட்டும் நம்பு வதினால் பயனில்லையென்றும் பௌத்த மதத்திற்கு மறுமலர்ச்சி அளிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டதென்றும் கருதுபவர்களில் தானும் ஒருவர் என்றும் குறிப்பிட்டார்.

லாண்டா தீவில் கம்யூனிஸ்டுகள்

ஹாங்ஹாங், மே 29—

ஹாங்ஹாங் பிரதேசக்கடல் எல்லைக்குள் இருக்கும் லாண்டா தீவில் சுமார் 20 கம்யூனிஸ்ட் சோல்ஜர்கள் இறங்கினார்கள் என்ற தகவல் கிடைத்ததின் பேரில் கடற்படை போலீஸ் உடனே அத்தீவிற்கு அனுப்பப்பட்டது.

லாட்ரானஸ் தீவுக்கருகில் சீன தேசியப் படையினருடன் சண்டையிட்ட ஸோல்ஜர்களாக இவர்கள் இருக்கவேண்டும் என்றும் இவர்கள் இருந்த படகு இந்த தீவிற்கு எதேச்சையாகவந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஊர்காப்புப் பயிற்சி

கராச்சி, டாக்காவில் நிலையங்கள்

கராச்சியிலும் டாக்காவிலும் சீக்கிரமே ஊர்காப்புப் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படும். ஒவ்வொன்றிலும் 80 மாணவர்கள் இருக்கலாம். மற்றொரு பயிற்சி நிலையம் அடுத்த ஆண்டு லாஹூரில் அமைக்கப்படும்.

விமானத் தாக்குதலைச் சமாளித்தல், காலி செய்தல் போன்ற தற்காப்பு நடவடிக்கைகளில் இங்கு பயிற்சியளிக்கப்படும். பயிற்சி முடிந்ததும் யுத்தக் காலத்தில் தற்காத்துக்கொள்ளும் முறைகளை ஜனங்களுக்கு போதிக்க மாணவர்கள் அனுப்பப்படுவார்கள்.

இந்த ஏற்பாட்டுக்கெல்லாம் யுத்தம் அருகில் இருக்கிறதா என்பது அர்த்தமில்லை, சர்வ நிலைமையையும் சமாளிப்பதற்கான ஆயத்தமே இது என்று தற்காப்பிலாகா அதிகாரி சொன்னார்.

மலைப் பாம்பைக் கடித்த சிறுவன்!

கேப்டவுன், மே 28—

ஒரு பெரிய மலைப் பாம்பு 10 வயதுச் சிறுவனைச் சுற்றிக் கொண்டு அவனை விழுங்கத் தயாராக இருந்ததாம். அச்சமயத்தில் அப்பையன் பாம்பின் வயிற்றை நன்றாக அழுத்திக் கடித்துவிட்டான். இதனால் வலி பொறுக்காத பாம்பு அப்பையனை விட்டுவிட்டு அருகிலுள்ள நாய் மேல் பாய்ந்து அதை விழுங்கிவிட்டது.

இனி நடப்பவை

குகை, சேலம்:— திருக்குறள் கழகம், திருவள்ளுவர் நினைவு நாள் 9-ம் ஆண்டுவிழா 1950 ஜூன் 3, 4 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் குகை திருச்சிரோட் ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் சமரச சன்மார்க்க சபையில் நடைபெறும்.

அவ்வமயம் சென்னை அரசியல் குழுவலர், தமிழ்நாட்டுத் தமிழ்கள் சங்க அமைப்பாளர் அருள்திரு. செம்மலை அண்ணலாரடிகள் அருணகிரிநாத சுவாமிகள்) தலைமை வகிப்பார். புலவர் தோழர் க, கவிஞர் முடியரசு, அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ. ஆகியோர் பேசுவர்.

* * *

வடசென்னை மதுத்தவகுல முன்னேற்ற சங்கம்:—சென்னை இராயபுரம் தோழர் பி. எம். ஸ்ரீராமுலு நாயுடு அவர்களின் தேக்குமரத் தொட்டியில் டி. சங்கத்தின் பொதுக்கூட்டம் 30—5—50 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் டாக்டர் அழகிரிசாமி நாயுடு அவர்கள் தலைமைவகிப்பார். தோழர்கள். என். ஜீவரத்தினம் எம். பி. சே. இராமதாஸ், எம். பி. வ. செகசந்திரன், ஆர். டி. வேணுகோபால் செட்டியார், இரா. விஸ்வநாதன் மற்றும் பலர் பேசுவர்.

பாக்கிஸ்தானில் ஜெர்மன் யந்திரங்கள்

காராச்சி, மே 28—

ஜெர்மனியிலிருந்து நஷ்டயீடாக வந்த இயந்திரங்கள் இப்போது விற்பனைக்குத் தயாராயிருக்கின்றனவாம்.

சின்னையாபுரம்

சின்னையாபுரம், மே 28—

மேலக் கோவில்பட்டியூர் சின்னையாபுரம் 21—5—50-ல் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மாலை 7-மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மா. சண்முக சுந்தரம் தலைமை தாங்கினார். எம். எஸ். சிவசாமி, இரா. ச. தங்கப்பழம் மற்றும் பல தோழர்கள் தி. மு. கழகமும் தற்கால அரசியலும் என்பது குறித்து பேசினார்கள். தோழர் நாகமணி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டு செயலாளர் நன்றிகூற இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது அடிவுற்றது. (சி. உ.)

தோழர் நாராயணசாமி மறைவுக்கு அனுதாபம்

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகள் தாளாமல் 24—5—50 புதன் கிழமையன்று திடீர் மரணமெய்திய ஓட்டேரி தி. மு. கழக உறுப்பினரும் 25வயது இளைஞருமான தோழர் நாராயணசாமி அவர்களின் குடும்பத்தாருக்கு ஓட்டேரி தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

குறிப்பு:—நேற்றைய "மாலைமணி" தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பவர் இதே தோழர் நாராயணசாமிதான் என்பதை வாசகர்கட்கு ஈண்டு நினைப்பூட்டுகிறோம். (கு-ர்)

தி. மு. க. கிளைகள்

காலகம்—சிற்றூர்க்கிளை

காலகம், மே, 14—

தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டைத் தாலுக்கா காலகம் கிராமத்தில் 13—5—50 இரவு 8 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புகூட்டம், பட்டுக்கோட்டை தோழர் கே. வி. திராவிடமணி தலைமையில் கூட்டப்பட்டு செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ராஜகோபால் துணைசெயலாளர்:—எம். கருப்பையா. பொருளாளர்:—வி. கோவிந்தசாமி, விளம்பர உறுப்பினர்:—என். ரங்கசாமி.

* * *

மனத்திடல்

மனத்திடல் கிராமத்தில் தி. மு. க. ஏற்பட்டு 20 பேர் அங்கத்தினர் சேர்ந்து, சந்தா புத்தகம் வாங்கிசந்தாவும் கட்டியிருக்கிறோம்: கழகத்தில் உள்ளவர்கள் பெயர்கள்.

தலைவர்:- ஆர். மருதையா; செயலாளர்:-மாணிக்கம்; பொருளாளர்:- வி. ராமன். செயற்குழு உறுப்பினர்: வி. பெரியசாமி, எஸ். சுப்பிரமணியன். விளம்பர உறுப்பினர்:-வி. ராமையா, ஏ. தங்கராசு, வை. கோவிந்தராசு, மா. சண்முகம், பி. கண்ணையா, கே. கிருஷ்ணமூர்த்தி, வி. அண்ணுச்சாமி, டி. மருதையா, அப்துல்ஜபார், எம். பெரியசாமி, ஞா. ஆரோக்கியசாமி, எம். பெரியசாமி, கே. மகமத்கனி, எஸ். அமுதநாடார் டெய்லர், வி. முருகையன்.

* * *

குருகார்ட்டூர்

தென்திருப்பேரை, (அ.கி.) மே. 2-

திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழா, குருகார்ட்டூர் 'பவுல்' மைதானத்தில் 30—4—50-ம் நாள் மாலை 6 மணிக்கு த. தனசேகரன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் மு. ச. மணிமொழியன் கொடியேற்றினார். நாலு வட்டார கழகமுன்னாள் செயலாளர் தோழர் சிவசங்கு அவர்கள் "இன்றைய சமுதாயத்தில் ஆரியர் நிலைமையும் திராவிடப் பெருங்குடி மக்கள் நிலைமையும்" பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தோழர் அறவேந்தன், அவர்கள் "திராவிட நாடு தனித்து இயங்க முடியுமா" என்பது பற்றியும் ஆரியர் சூழ்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் தம் முடிவுரையில் பண்டாரச்சன்னதிகளின் ஏகபோக வாழ்வின் சூழ்ச்சி பற்றி சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் கழக செயற்குழு உறுப்பினர்கள் கீழ்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர்:—தர்மராஜ், துணைச் செயலாளர்:—மு. ச. மணிமொழியன், பொருள் உறுப்பினர்:—த. தனசேகரன், விளம்பர உறுப்பினர்கள்:—மு. சந்திரசேகரன், க. சிவசுப்பு.

தி. மு. க.

இதுவரை தழைத்துள்ள கிளைகள்

481

ஆசிரியருக்கு முடங்கல்:

அரசியலார் கவனிப்பார்களா?

ஐயா,

16 5-50 தென்காசியில் மில் சேவு தொழிலாளர்களுக்கு நூல் சரிவர கிடைக்காமல் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். நூல் மில் லைசென்ஸ்தாரர்கள்செய்யும் பிளாக் மார்க்கெட்கள் அக்கிரமமாகின்றன. 30-ம் நெம்பர் வெள்ளை நூல் கட்டு ஒன்றுக்கு கன்ட்ரோல் விலை ரூ. 21. மில் லைசென்ஸ்தாரர்கள் விற்பது ரூ. 24—8—0 மில் லைசென்ஸ் தாரர்கள்களுக்கு நூல்இல்லையென்று சொல்லிவிட்டு ரூ. 21-புள்ள கட்டு ஒன்றுக்கு ரூ. 24—8—0 விற்று வருகிறார்கள். ஆகையால் ஏழை தொழிலாளர்களாகிய நாங்கள் 8 அணா கூலிக்கு நெய்து கொண்டு ரொம்பக் கஷ்டம் படுகிறோம். ஆகையால் சர்க்கார் அதிகாரிகள் உடனே கவனித்து தாரர்களுக்கு கன்ட்ரோல் விலைக்கு நூல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஏ. எஸ். எம். சாகுல்கமீது நசாதிக் தென்காசி.

* * *

ஆசிரியர்கள் அல்லல் தீருமா?

ஐயா,

வணக்கம்பல. இப்பவும் எங்கள் (சேலம்) மாவட்டத்தில் இன்று வரை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலை செய்துவந்த பல உபாத்தியாயர்களை (Un trained (ஆசிரிய பயிற்சியில்லாது உத்தியோகம் வகித்தவர்கள்) ஏப்ரல் மாத முடிவுடன் வேலையிலிருந்து விலக்கி விட்டனர். அதாவது அவர்களுக்கு உத்தியோகம் நீடிக்கப்பட்டால் இக் கோடை விடுமுறை சம்பளம் கொடுக்கநேரிடும். இதை மீதம் படுத்தவேண்டி அவ் ஆசிரியர்களை விலக்கிவிட்டனர் வருடம் பூராவும் மூளைக்கு வேலைகொடுத்து உழைக்கிறார்களே மாடுபோல, தினசரி— அவர்களுக்கு ஓய்வு அவசியம் என்பதால்தானே இவர்கள் கோடை விடுமுறை ஒரு மாதம் கொடுக்கிறார்கள். பல காலமாக இப்படியே தான் நடைபெறுகிறது. மற்ற உத்யோகஸ்தர்களுக்கும்தான் விடுமுறை உண்டு, ஆனால் சம்பளம் கொடுத்துதான் விடுமுறை. அப்படியிருக்க இந்த ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த கதி ஏன்? அவர்கள் உழைக்கவில்லையா! அல்லது அவர்களுக்கு ஓய்வுகொடுத்தால் சம்பளம் தேவையில்லை என்ற எண்ணமா! எந்தக் காலத்திலும் இல்லாத புதுமை—ஏழை உபாத்தியாயர்களின் வயிறு லட்டியடி! அவர்களுக்கு இம்மாதம் வேறு எங்கு தொழில் கிடைக்கும்! இதை இந்த மாவட்ட தலைவர்கள் உணரவில்லையா? அல்லது காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினர்கள் தொகை என்ற அகம்பாவமா!

பணம் மீதப்படுத்த வழி—ஏழையின் வயிற்றில் அடிப்பது தானா?

அரசாங்கம் இதை உடனே கவனித்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா?

ரா. அருணாசலம். கடத்தூர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.